# நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சார வியூகம்:

## ‘மகளிர்க்கான கட்டணமில்லா பயணம்’ - ‘காலை உணவுத் திட்டம்’ - ‘புதுமைப்பெண் திட்டம்’ என்கிற

# கழக அரசின் முத்தான மூன்று திட்டங்கள் பற்றி மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள்!

## கொளத்தூர் – திரு.வி.க.நகர் பாக முகவர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரை!

**சென்னை, மார்ச் 18 – மகளிர்க்கான கட்டணமில்லா பேருந்து பயணம் – பள்ளிப்பிள்ளைகளுக்கான காலை உணவுத் திட்டம் – புதுமைப்பெண் திட்டம் என்கிற கழக அரசின் முத்தான மூன்று திட்டங்கள் பற்றி பிரச்சாரத்தின் போது மக்களிடம் எடுத்துச் சொல்லுங்கள் என்று – கொளத்தூர் திரு.வி.க. நகர் பாக முகவர்கள் கூட்டத்தில் கழக இளைஞரணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.**

**சென்னை கொளத்தூரில், சென்னை கிழக்கு மாவட்டம், வட சென்னை நாடாளுமன்றத் தொகுதி, கொளத்தூர் – திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள், பாக நிலை முகவர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது.**

**இதில் கலந்துகொண்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சியுரையாற்றினார்.**

பாக முகவர்கள் கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

“இந்தியாவிற்கே ஒரு முதன்மையான முதல்வர்’ என்று நம் முதலமைச்சர் எவ்வாறு பெயர் வாங்கியிருக்கிறாரோ, அதேபோல இந்த கொளத்தூர் தொகுதி, தமிழ்நாட்டுக்கே ஒரு முன்மாதிரியான தொகுதி. அதனால்தான் நாங்கள் இந்தத் தொகுதியில் என்ன நடக்கிறது என்று பார்த்துவிட்டு, எங்கள் தொகுதிக்குச் சென்று ஏதாவது செய்துவிடுவோம்.

### பாக முகவர்கள் கூட்டம்!

இந்தப் பாக முகவர்கள் கூட்டத்திற்கு வருகை தந்ததில் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிகழ்ச்சியில் எனக்கு இன்னொரு பெருமை என்னவென்றால், இந்த கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர், கழகத் தலைவர் அவர்கள் இளைஞர் அணியில் செயலாளராக இருந்தவர். திரு.வி.க. நகரின் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் தாயகம் கவி அவர்களும் எங்களின் இளைஞர் அணியில் இருந்து மாநிலத் துணைச் செயலாளராக இருந்து, இப்போது தலைமைக் கழகத்திற்கு வந்திருக்கிறார்.

இந்தப் பத்து வருடம் ஒன்றிய பிரதமர் மோடி அவர்கள் என்னென்ன வடை சுட்டார் அத்தனையும் உங்களுக்கு அத்துபடி. எத்தனைப் பேருக்கு வேலை வாய்ப்பை வாங்கித் தருகிறேன் என்று சொன்னார். எத்தனை பேருக்கு வாங்கிக் கொடுத்தார். சி.ஏ.ஜி. என்ற தணிக்கைக் குழு வெளியிட்ட அறிக்கையில், ஒன்றிய அரசு செய்திருக்கக்கூடிய ரூபாய் ஏழரை லட்சம் கோடி செலவுக்கு கணக்கு இல்லை. ரூபாய் ஏழரை லட்சம் கோடி எங்கே சென்றது, என்று யாருக்குமே தெரியவில்லை.

### ஒரே தலைவர்!

ஒரு கிலோ மீட்டர் ரோடு போடுவதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு ரூபாய் 250 கோடி செலவு காட்டியிருக்கிறார்கள். `ஆயுஷ்மான் பாரத்’ என்ற ஒரு காப்பீட்டுத் திட்டம். அதன் கீழ், இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் போட்டிருக்கிறார்கள்.

இந்தக் கேள்விகளுக்கு மோடி பதில் சொல்லவே இல்லை. மாறாக, சி.ஏ.ஜி. அறிக்கை தயார் செய்த அத்தனை பேரையும் பணியிட மாற்றம் செய்துவிட்டார். இதையெல்லாம் எதிர்த்துக் கேட்கிற ஒரே தலைவர், இந்தியாவிலேயே நம் கழகத் தலைவர் அவர்கள்தான்.

இன்றைக்கு மோடி தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறார். கடந்த பத்து நாட்களில் மட்டும் எத்தனை முறை வந்திருக்கிறார் என்றால், ஐந்து முறை வந்திருக்கிறார். நான் ஒன்றே ஒன்று கேட்கிறேன். ஒன்றிய பிரதமர் மோடி அவர்களே, சென்னையில் புயல், எவ்வளவோ பெரிய வெள்ளம் வந்தது. எல்லா இடத்திலும் தண்ணீர் நின்றதே, அப்போது யார் உங்கள்கூட நின்றது. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களாகிய நாம்தான் மக்களோடு மக்களாக நின்றோம்.

தூத்துக்குடியிலும் அவ்வளவு பெரிய பேரிடர் ஏற்பட்டது. ஒரு வருடம் பெய்யவேண்டிய மழை ஒரே நாளில் பெய்தது. யார் ரோட்டில் நின்று சரி செய்தது. திராவிட முன்னேற்றக் கழகமும் நம் ஆட்சியும்தான். ஒன்றிய பிரதமர் மோடி அவர்களே வந்தீர்களா, வந்து பார்த்தீர்களா, அப்போது வரவில்லை.

### 6 ஆயிரம் ரூபாய் நிதி!

குஜராத், அவர் முதலமைச்சராக இருந்த மாநிலம். பா.ஜ.க. ஆளுகின்ற மாநிலம். மழை பெய்த அடுத்த நாள் சென்று, அடுத்த நாளே நிதி வழங்கப்பட்டது. ஆனால், நம் தலைவர் இங்கு பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 6 ஆயிரம் ரூபாய் கொடுத்தார்.

ஜனவரி மாதம் மட்டும் வெள்ளத்திற்கு 6 ஆயிரம் நிதி ஒதுக்கீடு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ஆயிரம் ரூபாய், பொங்கல் பரிசு ஆயிரம் ரூபாய் என்று ஒவ்வொரு குடும்பத்திற்கு கும் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 8 ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கிறார் நம் தலைவர் அவர்கள். 37 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பீடு கொடுங்கள் என்று உரிமையோடு ஒரு முதலமைச்சர் கேட்கிறார்.

### என்ன தப்பு?

கேட்டதுக்கு என்ன சொன்னார்கள், ஒன்றிய நிதி அமைச்சர். `பணம் கொடுக்க நாங்கள் என்ன ஏ.டி.எம். மெஷினா?’, என்று கேட்டார்கள். நான் என்ன சொன்னேன். `நாங்கள் என்ன உங்கள் அப்பன் வீட்டு காசையா கேட்டோம்’ என்று கேட்டேன். இதில் ஏதாவது தப்பு இருக்கிறதா, நாம் கட்டிய வரிப் பணத்தைத் தான் நான் கேட்டேன். அந்த அம்மாவுக்கு தூக்கம் போய்விட்டது. டெல்லியில் ஒரு பத்திரிக்கையாளர்கள் சந்திப்பை வைத்து, ஒரு மணி நேரம் எனக்குப் பாடம் எடுத்தார்கள்.

`உதயநிதி மரியாதையாகப் பேசக் கற்றுக்கொள்’ என்று சொன்னார்கள். நான் அடுத்த நாளே சொல்லிவிட்டேன். `என்னை மன்னித்து விடுங்கள். மரியாதைக்குரிய நிதி அமைச்சர் அவர்களே, உங்கள் மாண்புமிகு அப்பா வீட்டு காசை நாங்கள் கேட்கவில்லை, எங்களின் தமிழ்நாட்டு மக்கள் கட்டியிருக்கக்கூடிய வரிப் பணத்தைத்தான் நான் கேட்கிறேன்’. அந்த நிதி அமைச்சர் வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். இதுவரை ஒரு ரூபாய் நிதி கூட வரவில்லை.

ஒன்றிய நிதி அமைச்சர் அவர்களே, நீங்கள் கேட்ட மரியாதையை நான் கொடுத்துவிட்டேன். நாங்கள் கேட்ட எங்கள் மக்களின் வரிப்பணத்தை எப்போது கொடுப்பீர்கள் என்பது மட்டும்தான் என்னுடைய கேள்வி. அவர்கள் நம் நிதி உரிமையைப் பறித்து விட்டார்கள்.

### ஐந்தரை லட்சம் கோடி வரி!

கடந்த ஆறு வருடத்தில் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய அரசுக்கு நாம் எவ்வளவு வரி தெரியுமா கட்டியிருக்கிறோம். ஐந்தரை லட்சம் கோடி. திருப்பி, நமக்கு வெறும் ஒன்றரை லட்சம் கோடி மட்டுமே கொடுத்துள்ளார்கள். நம் தமிழ்நாட்டு மக்கள் ஒன்றிய அரசிற்கு ஒரு ரூபாய் வரி கட்டினோம் என்றால், நமக்கு அவர்கள் திருப்பித் தருவது வெறும் 28 பைசாதான்.

நான் நரேந்திர மோடி அவர்களுக்குப் பெயரே வைத்துவிட்டேன். இனி மேல் நான் உங்களை நரேந்திர மோடி என்று கூப்பிட மாட்டேன். ‘பாரத பிரதமர் திரு 28 பைசா’ என்றுதான் இனி மேல் அவரைக் கூப்பிடப் போகிறேன். இப்போது தேர்தல் வருகிறது என்பதால், வருகிறார்.

இதேபோலத்தான் 2019-இல் மதுரைக்கு வந்தார். உங்களுக்குத் தெரியும், அங்கே என்ன செய்தார் என்று. ஒரேயொரு செங்கலை வைத்துவிட்டு, எய்ம்ஸ் மருத்துவமனை கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னார்கள். கொண்டு வந்துவிட்டோம் என்றும் சொன்னார்கள். நான் அந்தப் பக்கம் போகும்போது அந்தக் கல்லையும் தூக்கி வந்துவிட்டேன்.

அதற்கு என்மேல் வழக்கு எல்லாம் போட்டார்கள். உதயநிதி கல்லைத் திருடிக்கொண்டு போய்விட்டார் என்று. நான் சொன்னேன். கல்லைத் திருடினேன் என்று சொல்கிறீர்களே, மருத்துவமனையையே திருடி விட்டேன் என்று சொல்லுங்கள் என்று. இப்போதும் மதுரைக்கு வந்திருக்கிறார். அப்போதும் நாங்கள் எய்ம்ஸ் மருத்துவமனையை மதுரைக்குக் கொண்டு வருவோம் என்று அதே வடையைச் சுடுகிறார்.

### 2047-இல் வல்லரசு!

2014--இல், `2020-ஆம் ஆண்டு இந்தியாவை மாற்றிக் காட்டுவேன்’ என்று சொன்னார். இப்போது திருப்பி அதே வடையைச் சுடுகிறார். என்ன தெரியுமா சொல்கிறார். 2047-இல் இந்தியாவை நான் வல்லரசு நாடாக மாற்றிக் காட்டுவேன் என்று சொல்கிறார்.

நாளை (சனிக்கிழமை) மூன்று மணிக்குத் தேர்தல் தேதி அறிவிக்கப் போகிறார்கள். உங்களிடம் ஆலோசனை வழங்குவதற்கு நான் வரவில்லை. உங்களிடம் வாழ்த்து வாங்குவதற்கு வந்திருக்கிறேன். நான் இன்றைக்கு இந்தப் பிரச்சாரத்தை முடித்துவிட்டுப் போய்விடுவேன். தலைவர் கண்டிப்பாக வருவார். உங்களையெல்லாம் சந்திப்பார். நாங்கள் வந்துவிட்டுப் போய்விடுவோம்.

### தலைவர் அறிவிப்பார்!

தினமும் மக்களோடு மக்களாக நின்று, மக்களைச் சந்தித்து அவர்களின் வீட்டிற்குள் சென்று இந்தப் பிரச்சாரத்தை செய்யப்போவது என்னுடைய சகோதரிகள், என்னுடைய சகோதரர்கள் நீங்கள்தான். அடுத்த 40 நாள்கள் அதை மட்டும்தான் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தேர்தலுக்கும், சென்ற இரண்டு மூன்று தேர்தலுக்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. அதை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள்.

2019-ஆம் ஆண்டு தேர்தல் அப்போது நாம் எதிர்க்கட்சி. எதிர்க்கட்சியாக இருந்தே மிகப்பெரிய வெற்றியை தமிழ்நாட்டு மக்கள் தேடிக் கொடுத்தார்கள் என்றால், அதற்குக் காரணம் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள்தான். நீங்கள்தான் அந்தப் பிரச்சாரத்தைச் செய்தீர்கள். ஒவ்வொரு வாக்கும் உதயசூரியனுக்கு வரவேண்டும் என்று நம் கலாநிதி வீராசாமி அவர்களை 4.5 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் தமிழ்நாட்டிலேயே மூன்றாவது இடத்திலேயே வெற்றிபெற வைத்தீர்கள்.

இந்த முறை தலைவர் உங்களுக்குப் பிடித்த வேட்பாளர், மக்களின் அன்பைப் பெற்ற வேட்பாளர், நிச்சயம் வெற்றி வேட்பாளரை தலைவர் அறிவிப்பார். அது கிட்டத்தட்ட யார் என்று உங்களுக்கே தெரியும். இந்த முறை தமிழ்நாட்டிலேயே அதிகமான வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் அந்த வேட்பாளரை வெற்றி பெற வைக்க வேண்டும். இரண்டு நாட்களுக்கு முன்பு தலைவர் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது சொன்னார், தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் நான்தான் வேட்பாளர். முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்தான் வேட்பாளர் என்று தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

அதை மட்டுமே மனதில் வைத்துக்கொண்டு நாம் வேலை பார்க்க வேண்டும். அதற்காக தலைவர் அவர்கள் ஒரு நல்ல வெற்றி வேட்பாளரைக் கொடுப்பார். நாம் அடுத்த 40 நாட்களுக்கு மனதில் இருக்கக்கூடிய சின்னச் சின்ன சலசலப்புகளை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு உழைக்க வேண்டும். அடுத்த 40 நாட்கள் நம் குறிக்கோள் ஒன்றே ஒன்றுதான். மக்கள் அனைவரும் வாக்குச்சாவடிக்கு வந்து உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வைக்க வேண்டும்.

### கல்வி உரிமை மீட்க...!

ஒன்றிய பா.ஜ.க. அரசு, நீட் நுழைவுத் தேர்வை கொண்டு வந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராக இருக்கும்போது கிராமப்புறங்களில் இருந்து ஏழை, எளிய மாணவர்கள் டாக்டர் படிக்க வேண்டும் என்று, நுழைவுத் தேர்வை ரத்து செய்தார். பன்னிரெண்டாம் வகுப்பு மதிப்பெண் போதும். நாங்கள் பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுக்கக்கூடிய பாடம் போதும் என்று நுழைவுத்தேர்வை ரத்து செய்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

இன்னும் சொல்லப்போனால், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையார் இருந்தவரைக்கும் கல்வி உரிமையை விட்டுக்கொடுக்கவில்லை. நீட் தேர்வை தமிழ்நாட்டிற்குள் நுழைய விடவில்லை. இந்தியாவில் மற்ற மாநிலங்களில் எல்லாம் நீட் தேர்வு வந்துவிட்டது. ஆனால், தமிழ்நாட்டிற்குள் நுழைய விடவே இல்லை. அந்த அம்மா இறந்துபோன பிறகு இங்கு இருந்த அடிமை கும்பல் பா.ஜ.க.வின் வற்புறுத்தலால் நீட் தேர்வைக் கொண்டு வந்து நுழைத்ததின் காரணமாக இதுவரைக்கும் 21 குழந்தைகள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். அது தற்கொலை அல்ல கொலை. அ.தி.மு.க.-வும் பா.ஜ.க.-வும் சேர்ந்து செய்த கொலை.

அரியலூர் அனிதாவில் தொடங்கி சென்னை ஜெகதீஷ் வரை பல மாணவர்களை நாம் இழந்திருக்கிறோம். ஒவ்வொரு குழந்தையின் வீட்டுக்கும் சென்று நான் ஆறுதல் கூறினேன். இப்போது நம் தலைவருடைய தொகுதியான, கொளத்தூரில் ‘அனிதா அச்சீவர்ஸ் அகாடமி’ அமைத்து அதன் மூலம் பெண் குழந்தைகளுக்கு கல்வி, வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தந்து கொண்டிருக்கிறோம்.

### தேர்தல் பணி!

தனது மகனின் மருத்துவர் கனவு நிறைவேறாமல், வாழ்வை மாய்த்துக்கொண்ட விரக்தியில், அவருடைய தந்தையும் கடிதம் எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்துகொண்டார். நீட்டால் ஒரு குடும்பத்தையே இழந்திருக்கிறோம். இப்படி நாம் இழந்திருக்கிற கல்வி, மொழி உரிமைகளை மீட்டெடுக்க வேண்டுமென்றால், அடுத்த பிரதமராக யார் வர வேண்டுமென்பதை தமிழ்நாட்டு வாக்காளர்கள் முடிவு செய்ய வேண்டும். மக்களை முடிவெடுக்கச் செய்ய பாக முகவர்களாக நீங்கள்தான் களத்தில் இறங்கி தேர்தல் பணியாற்ற வேண்டும்.

எப்படிப்பட்ட நேரத்தில் நாம் ஆட்சிக்கு வந்தோம் என்பதை எண்ணிப் பாருங்கள். கொரோனா பேரிடர் காலத்தில்தான் நாம் ஆட்சிக்கு வந்தோம். அப்போது பிரதமர் மோடி விளக்கு ஏற்றுங்கள், தட்டை வைத்து அடியுங்கள், கோவிட் தொற்று ஓடிப் போய்விடும் என்று மக்களிடையே கூறிக் கொண்டிருந்தார். அந்தப் பேரிடர் சமயத்தில் கூட, தடுப்பூசி செலுத்திக் கொண்டு மக்களைச் சந்தித்த ஒரே முதலமைச்சர் நமது முதலமைச்சர் மட்டும்தான். கோயம்புத்தூரில் உள்ள மருத்துவமனையில் பாதுகாப்பு உடைகளை அணிந்து கொண்டு, கோவிட் நோயாளிகள் இருக்கும் வார்டுக்குள்ளேயே சென்று அவர்களுக்கு ஆறுதல் கூறினார். தரமான சிகிச்சை அளிக்க அறிவுறுத்தினார்.

அண்ணன் சேகர் பாபு, அண்ணன் தாயகம் கவி மற்றும் நான் உட்பட பலரும் ஒவ்வொரு வீடாகச் சென்று தடுப்பூசி போடும்படி மக்களை வலியுறுத்தினோம். அதுமட்டுமல்ல, நாம் ஆட்சிக்கு வந்த சமயத்தில், அ.தி.மு.க. அரசு ஏராளமான கடன்களை வைத்து விட்டுப் போயிருந்தது.

### மூன்றே மூன்று திட்டங்கள்!

ஆனால், அப்படிப்பட்ட நேரத்திலும் நம்முடைய முதலமைச்சர் கொடுத்த வாக்குறுதியின்படி, நிறைய திட்டங்களை நிறைவேற்றினார். நம்முடைய அரசைப் பற்றி யாராவது உங்களிடம் கேட்டால், மூன்றே மூன்று திட்டங்கள் பற்றி நான் சொல்லுகிறேன். முதலமைச்சரையோ, நாடாளுமன்ற உறுப்பினரையோ, சட்டமன்ற உறுப்பினரையோ யாராவது விமர்சனம் செய்தால் இதை மட்டும் அவர்களிடம் கூறுங்கள். அதுவே போதுமானது.

கடுமையான நிதி நெருக்கடியிலும் மகளிருக்கான கட்டணமில்லா பயணம் எனும் திட்டத்தைக் கையெழுத்திட்டு நிறைவேற்றினார். கட்டணமில்லா பயணச் சேவையை வழங்கும் பேருந்துகளை அடையாளம் காண பேருந்துகளின் முகப்பில் ‘பிங்க்’ நிறம் பூசப்பட்டது. அந்தப் பேருந்துகளை மக்கள் இப்போது பல இடங்களில் ‘ஸ்டாலின் பஸ்’ என்றே அழைக்கிறார்கள். அந்த அளவுக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டம் மக்களிடம் சென்று சேர்ந்திருக்கிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் மகளிர் மாதம் ஒன்றுக்கு 900 ரூபாய் வரை சேமிக்கிறார்கள். அப்படியானால் ஒரு ஆண்டுக்கு சராசரியாக 11,000 ரூபாய் சேமிக்கிறார்கள். இந்த இரண்டரை ஆண்டுகளில் மட்டும் 450 கோடி முறை மகளிர் கட்டணமில்லாமல் பயணித்திருக்கிறார்கள்.

### திராவிட மாடல் அரசு!

அதுதான் இந்த திட்டத்தினுடைய மிகப்பெரிய வெற்றி. தற்போது இந்தத் திட்டத்தை மற்ற மாநில அரசுகளும் அறிமுகப்படுத்தத் தொடங்கிவிட்டன. ஒட்டுமொத்த இந்தியாவுக்குமே எடுத்துக்காட்டாக இருப்பதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு.

இப்படி இன்னொரு திட்டத்தையும் கூறவேண்டும். முன்பெல்லாம் வேலைக்குச் செல்கின்ற பெண்கள் அவசர அவசரமாக காலையில் சமைத்து தன் பிள்ளைகளுக்கு கொடுத்தும், கொடுக்க முடியாமலும் சென்று வந்தார்கள். வேலையில் இருந்து கொண்டு, தன் குழந்தை சரியாக சாப்பிட்டதோ இல்லையோ என்று வருத்தப்பட்டுக் கொண்டிருப்பார்கள். தாய்மார்களின் அந்தக் கவலையைப் போக்கிய உன்னதத் திட்டம். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகளுக்கு ‘காலை உணவு’ திட்டம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை இப்போது தமிழ்நாடு முழுவதும் விரிவாக்கம் செய்துவிட்டார்.

குழந்தைகள் காலையில் பள்ளிக்கூடத்திற்கு வந்தால், தரமான காலை உணவு அவர்களுக்குக் காத்திருக்கிறது. இந்தத் திட்டத்தையும் பக்கத்தில் உள்ள தெலங்கானா மாநிலத்தில் இருந்து வந்து பார்த்துவிட்டு, எப்படி இதைச் செயல்படுத்துகிறீர்கள் என்பதையும் கேட்டறிந்து சென்றிருக்கிறார்கள். அங்கேயும் இந்தத் திட்டத்தை செயல்படுத்தப் போகிறார்கள். இந்தத் திட்டத்தை இன்னும் விரிவாக்கம் செய்ய நம் தலைவர் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்.

### புதுமைப் பெண் திட்டம்!

அதேபோல, புதுமைப் பெண் திட்டம். ஒரு காலத்தில் பெண்கள் வீட்டை விட்டு வெளியில் வருவதற்குப் பல முறை யோசித்துக்கொண்டு வராமல் இருந்தார்கள். பெண் குழந்தைகள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடாது என்று தடுத்து வைத்திருந்தார்கள். பெண்கள் படிப்பதற்கு உரிமை கிடையாது என்று கூறி தடுத்து வைத்திருந்தார்கள். இதையெல்லாம் விவாதத்துக்கு உட்படுத்தி, பெண்கள் படிக்க வேண்டும் என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தது திராவிட இயக்கம். அதன் பலனாகத்தான் இன்று பெண்கள் பலரும் கல்லூரிகளில் படிப்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

பெண் குழந்தைகள் உயர்நிலைப் பள்ளிப் படிப்புடன் நின்று விடக்கூடாது, அவர்கள் கல்லூரியிலும் படித்து நல்ல வேலைகளுக்குச் செல்ல வேண்டும் என்கிற நல்லெண்ணத்துடன், அவர்கள் அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் சேர்ந்தாலும் மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கக்கூடிய புதுமைப்பெண் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் செயல்படுத்தினார்.

இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டதில் இருந்து பெண்கள் கல்லூரியில் சேர்ந்து படிப்பது 40 சதவிகிதம் அளவுக்கு அதிகமாகி இருக்கிறது. இந்தத் திட்டத்தின் பயன்பாட்டை அறிந்த முதலமைச்சர், இப்போது ஆண்களுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டத்தை இந்த பட்ஜெட்டில் அறிமுகம் செய்திருக்கிறார். இனி அரசுப் பள்ளிகளில் படித்து கல்லூரி சேரும் மாணவர்களுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்பட இருக்கிறது.

எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் இத்திட்டத்தை முதலமைச்சர் தொடங்கிவைத்தார். ஆரம்பித்து கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. இந்தத் திட்டத்தின் வாயிலாக ஒரு கோடியே 16 லட்சம் பெண்களுக்கு மாதா மாதம் 15 ஆம் தேதி, கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த மூன்று திட்டங்களை மட்டும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். யாரிடம் பேசினாலும் இந்தத் திட்டங்கள் பற்றி மக்களிடம் பேசுங்கள். மாற்றுக் கட்சியிடம் பேசுங்கள். என்ன குறை இருக்கிறது என்று கேளுங்கள். அந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. அதை உங்கள் வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினரிடம் கூறுங்கள். மக்களோடு மக்களாகப் பழகுங்கள். சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு, புதுச்சேரி சேர்த்து நாற்பதுக்கு 39 தொகுதிகளில் நாம் வெற்றி பெற்றோம். இம்முறை 40-க்கு 40 வெற்றி பெறச்செய்து தமிழ்நாட்டு மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகள் என்பதை நிரூபிக்க வேண்டும்.

### மனதில் இருந்தே பேசினேன்!

டெல்லியில் அடுத்து ஆட்சி அமைக்கப்போகும் அடுத்த பிரதமர் யார் என்பதை நீங்கள் முடிவு செய்ய வேண்டும். 2021--இல் அடிமைகளை விரட்டி வீட்டுக்கு அனுப்பினோம். அடிமைகள் யார் என்பது உங்களுக்கே தெரியும். இந்த முறை அடிமைகளின் எஜமானர்களை விரட்டியடிக்க வேண்டும், அதற்கான நேரம்தான் 2024 நாடாளுமன்றத் தேர்தல். பெயர்களை மட்டும் தான் பேப்பர் பார்த்துப் படித்தேன். மற்ற விஷயங்களை என் மனதில் இருந்தே பேசினேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

பாக முகவர்கள் கூட்டத்தில், அமைச்சரும் மாவட்டக் கழகச் செயலாளருமான பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மாநிலங்களவை உறுப்பினர் இரா. கிரிராஜன், சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், சேமிப்புக் கிடங்கு வாரியத் தலைவர் ப.ரங்கநாதன்,

தொகுதிப் பார்வையாளர்கள் மருத்துவர் யாழினி, கௌதமன், ஐ.சி.எஃப். முரளி, தமிழ்வேந்தன், சாமிக் கண்ணு, நாகராஜ், மகேஷ்குமார், ஏகப்பன், புனிதவதி, தேவன், ஆசாத், தேவ ஜவகர், சரிதா மகேஷ்குமார், சட்டத்துறை மாநில துணைச் செயலாளர் சந்துரு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் லோகேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் தனசேகர், ஜெகதீஷ், பாலமுருகன், வினோத், ஜி.ஜே.பிரபு, சங்கர் நானா,

சித்திக், அசோக்குமார், துரைக் கண்ணு, துலுக்கானம், ஃபெரோஸ் கான், ராஜா முகமது, மகேஷ், பொதுக் குழு உறுப்பினர்கள் உதயசங்கர், துளசிங்கம், மாமன்ற உறுப்பினர்கள் சாரதா, யோகப்பிரியா தனசேகர், தாவுத்பி, அமுதா பொன்னிவளவன், ஸ்ரீதனி, சரவணன், ரமணி லோகேஷ், தமிழ்ச்செல்வி சசிக்குமார், வட்டக் கழக நிர்வாகிகள் அதிபதி, எம்.ஜே. சி.பாபு உள்பட பலரும் கலந்து கொண்டனர்.

